1967 நவம்பர் 24]

நகை அடகு பிடிப்பவர்கள்

* **427 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகம் பூராவும் எத்தனை நகை அடகு (Pawn Brokers பிடிப்பவர்கள் இருக்கிறார்கள்?

(இ) ஒரு மாதத்திற்கு ரூபாய் நூற்றுக்கு ஒரு ரூபாய் வட்டி என்று அடகு சீட்டில் அச்சடித்து விட்டு நூற்றுக்கு இரண்டு ரூபாய் வட்டி வசூலிப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(உ) ஆம் எனில், இந்தத் தவறான நடத்தையைத் தடுக்க சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 5,346.

(இ) தெரியாது.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, தெரியாது என்ற பதிலைக் கொஞ்சம் கவனித்துத் தெரிந்துகொள்வதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு முன்வருமா ? பெரும் பகுதி கிராமங்களிலும், மற்ற இடங்களிலும் இம்மாதிரி வசூலிக்கப் படுவதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதன் காரணமாக, உடனடியாக அரசு ஆவன செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்குப் பதில் சொல்லாமல் இருக்க அமைச்சர்களுக்கு உரிமை உண்டு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, கூடுதலாக, சட்டத்திற்குப் புறம்பாக வட்டி வசூலிக்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா, அரசாங்கத்திற்குத் தெரிந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது. இதுவரையில் எங்களுக்குத் தெரியாது. அதற்குரிய சட்டத்தில் 15-வது பிரிவு இருக்கிறது. ரூ. 500 அபராதம் போடப்படும் என்று இருக்கிறது. தவறுதலாக எங்கு நடக்கிறது என்று அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

Merger of Medical and Public Health Departments

* 428 *Q*.—THIRU K. VINAYAKAM :
THIRU S. DORAISAMY : } Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is a move with the Government for the merger of Medical Department with Health Department; and

(*b*) if so, the advantages of such a merger?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

[1967 நவம்பர் 24

(இ) மருத்துவத் துறையும் பொதுச் சுகாதாரத் துறையும் இணைந்து செயல்பட்டால், கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதி மேலும் நல்ல முறையிலும் மனநிறைவளிக்கும் வகையிலும் கிட்டுவது இயலும். கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மையமாகக் கொண்டு பிணி நீக்கும் பிரிவும், பிணித் தடுப்புப் பிரிவும் ஏற்ற வகையில் இணைந்து மக்களுக்கு நன்முறையில் மருத்துவ வசதி அளிக்கச் செயல்பட முடியும்.

திரு. சு. துரைசாமி : டி.எம்.எஸ்., டி.பி.எச். பதவிகளை 1966 ஜூன் முதற்கொண்டு ஒன்று சேர்க்க ஜி.ஓ. 740 போடப்பட்டது. அந்த உத்தரவை இன்னும் அமல் நடத்தாததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமல் நடத்துவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : மருத்துவத் துறையும், பொது சுகாதாரத் துறையும் மக்களுக்கு இன்றியமையாத பெருந்த துறைகளாகும். அந்தத் துறைகளுக்கு இரண்டு டைரக்டர்களைத் தனியாக வைத்திருந்தும், போதுமான அளவுக்கு நம் நாட்டில் நோய்கள் தடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் பொதுச் சுகாதார வசதிகளும் வளரவில்லை என்ற சூழ்நிலையை வைத்து, இரண்டு துறைகளையும் ஒன்று சேர்க்காமல், தனித்தனியாகப் பிரித்து வைத்து நல்ல பணிகள் புரிவதற்கு அரசாங்கம் முன்வருமா ? அதற்கு என்ன செலவாகும் ? அந்தச் செலவை மேற்கொள்வதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மருத்துவத் துறை, பொது சுகாதாரத் துறை ஆகிய இரண்டு துறைகளையும் இணைப்பது என்பது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட விஷயமாகும். எனவே, அந்த முடிவின் அடிப்படையில் தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக் கருதிக் கொண்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : May I know what the unusual advantages of the merger of these two departments are, when they are not able to cope up with the problems that arise at the present stage?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : There are no unusual advantages. The important considerations that have been urged in favour of the proposals for integrating Medical and Public Health Departments and for forming a Directorate of Medical Education are—

(1) An integrated approach between the Medical and Public Health Departments will facilitate better and more satisfactory provision of medical relief in rural areas by proper co-ordination of the curative and preventive aspects of medical relief with the Primary Health Centre as the focus;

(2) Co-ordinated recruitment of doctors for the whole Medical and Health Departments and adequate training of doctors in all aspects of Medical relief will be possible;

(3) The implementation of the Family Planning Programme will gain considerable momentum under an unified control and direction at State level, thereby avoiding the present duplication of efforts by the separate Medical and Health Departments;

(4) The Government of India have been repeatedly urging that the two Departments should be integrated at all levels so as to facilitate a co-ordinated implementation of all Medical and Health Schemes and in particular to utilise the services of trained staff working in the Malaria Eradication Programme in places where it has reached the maintenance phase;

(5) The increasing need for a separate Directorate of Medical Education has been repeatedly stressed by the University of Madras, so that the vast expansion in Medical Education that is necessary to train enough doctors and other Medical Technicians could be carried out smoothly.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : மருத்துவத் துறையையும், சுகாதாரத் துறையையும் ஒன்றாக இணைக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் எப்பொழுது அந்தத் துறைகளை ஒன்றாக எடுத்துக் கொள்ள அரசாங்கம் நினைக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே குறிப்பிட்டது போல, அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடன் அதை அமுலுக்குக் கொண்டு வரும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு இலாகாக்களையும் ஒன்றாகச் சேர்ப்பது தவறு என்று கருதி, அதற்காக டி.எம்.எஸ். ராஜிநாமா செய்தது உண்மையா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிப்பட்ட கேள்வி போட வேண்டும்.

DR. H. V. HANDE : Will the Hon. Minister take this House into confidence and tell us whether it is not a fact that the Director of Medical Services has submitted her resignation on the ground that amalgamation has not taken place? Will the Minister clarify the rumours because there is a lot of rumour and confusion outside?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not think that the rumour should be seriously considered.

THIRU K. VINAYAKAM : Is the Government aware of the fact that the personnel required to man these departments are technical people and that Medicine and Public Health are recognised as two separate sciences? Public Health also is considered as important as Medicine. The degrees awarded to the respective people are entirely different degrees. The person in whom the duties of both the departments are merged may not

be competent to deal with these two sciences. Such being the case why should they be merged and will the Government consider the proposal to maintain the *status quo*?

THE HON. THIRU C. N. ANNADURAI: Till 1923 the two departments were integrated and afterwards they were separate. The Government of India have been urging this Government to integrate them once again. I have been hearing the views of the various Members and it makes me feel that there are two sides to the problem. Certainly we will correspond with the Centre about the views expressed by hon. Members like Mr. K. Vinayakam, about the need for not integrating them.

வேலூர் அரசினர் மருத்துவ மனை

* 429 வினா.—திரு. மா. பா. சாரதி: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வேலூர் அரசினர் மருத்துவ மனையில் காது, தொண்டை, மூக்கு வைத்திய நிபுணர் (E.N.T. Specialist) கண் வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம். காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் மேல் படிப்பிற்குப் போய் விட்டதால் அவருக்குப் பதிலாக மற்றொரு மருத்துவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, நியமனம் செய்யப் பட்ட டாக்டர் இப்பொழுது லீவு எடுத்துக் கொண்டாரா? இரண்டு மூன்று வருஷங்களாக அங்கு கண், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை செய்வதற்கு டாக்டர் இல்லாமல் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. நிரந்தரமாக ஒரு டாக்டரை அங்கே நியமிப்பதற்கு சர்க்கார் முன்வருமா, அதை உடனடியாகச் செய்யுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே டாக்டர் நியமனம் செய்தாகிவிட்டது. அவர் லீவு எடுத்துக் கொண்டிருந்தால், லீவு முடிந்தவுடன் மறுபடியும் அங்கே வந்து சேர்ந்துவிடுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மேற்கு வங்க ஐக்கிய முன்னணி அமைச்சரவையின் பதவி நீக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. என். சங்கரய்யா, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. செ. பாலசுப்பிரமணியன், ஆகியவர்கள் கையெழுத்திட்டு, ஒரு ஒற்றி